# அரசறிவியல்

## அரசின் இயல்புகள் தொடர்பிலான கோட்பாட்டு



www.e-thaksalawa.moe.gov.lk

Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி: 3.4** நானும் பிரசையொருவர் எனும் வகையில் அரசு தொடர்பான கோட்பாடுகளையும் விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அடிப்படைகளை உருவாககிக்கொள்ளவர்.

**தேர்ச்சி மட்டம்: 3.4.1** அரசியல் எண்ணக்கருக்களையும் கோட்பாடுகளையும் அடிப்படையாக கொண்டு அரசையும் அதன் இயல்புகளையும் பகுத்தாய்வர்.

## 3.4.1 சமூக ஒப்பந்தவாதம்

அரசு என்பது ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக மனிதனால் உருவாக்கப்பட்டதை விளக்குவதே சமூக ஒப்பந்தவாதம் ஆகும்.

மத்தியகால ஐரோப்பாவில் அதிகாரத்தை நியாயப்படுத்துவதற்காக தெய்வீக உரிமை கோட்பாடு கீழ்நிலையடைந்த வேளை அந்த இடைவெளியை நிரப்பவே சமூகஒப்பந்தவாதம் தோற்றம் பெற்றது.

இக்கருத்தியலை கோட்பாடாக முன்வைத்தவர்கள் தோமஸ் ஹொப்ஸ்,ஜோன்லொக், ஜீன்ஜெக்ருசோ போன்ற மூவருமாவர்.

**தோமஸ் ஹொப்ஸ் (கி.பி 1548-1679)**

இங்கிலாந்தில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் வாழ்ந்தார். இவர் எழுதிய லெவியாதன் என்ற நூலில் மனிதன் சுயநலன் மிக்கவன், காட்டுமிராண்டியாகவும், தன்னலவாதியாகவும், பகுத்தறிவு அற்றவனாகவும் வாழ்ந்தான். எங்கும் பயமும், தன்னலமும் அமைதியின்மையும் காணப்பட்டது. இதனால் மக்கள் தங்களுடைய உரிமைகள் அனைத்தும் ஒரு மனிதனிடம் ஒப்படைத்து அம்மனிதனின் ஆணைக்கு கீழ்படிந்து வாழ்வதற்கு உடன்பட்டுக்கொண்டான். இங்கு மனிதனே இறைமையாளன். அவனுடைய ஆணைகள், சட்சங்களுக்கு சமூகத்தில் சகலரும் கீழ்ப்படிய வேண்டும் என்று கூறுகின்றார்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**ஜோன்லொக் (கி.பி 1632-1704)**

ஆங்கிலப்புரட்சிக்காலத்தில் வாழ்ந்து தனது “சிவில் அரசாங்கத்தினுடைய இரு உடன்படிக்கை” என்ற நூலில் எதேட்சையதிகார அரசாட்சி கீழ்நிலைப்படுத்தப்பட்டு பாராளுமன்றின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக தமது கோட்பாட்டினை முன்வைத்தார்.

**ஜீன்ஜெக்ரூசோ**

பிரான்சிய புரட்சிக்காலத்தில் வாழ்ந்து தனது “சமூக ஒப்பந்தம்” என்ற நூலில் எதேட்சையதிகார அரசாட்சிக்கும் ஊழல்மிக்க உயர்குழாம் அதிகாரத்திற்கும் எதிராக பொதுமக்களின் புரட்சியால் அரசாட்சிமுறை மற்றும் உயர்குழாம் அதிகாரம் இல்லாதொழித்து அதிகாரத்தின் ஊற்று பொதுமக்கள் என்பதைக்காட்டும் கோட்பாட்டினை முன்வைத்தார்.

## 3.4.2 மாக்ஸ்வாதம்

- மாக்ஸ்வாதம் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வரலாறு மற்றும் சமூகம் பற்றி முன்வைக்கப்பட்ட பரந்த தத்துவமாகும்.
- ஜேர்மனியில் பிறந்த கார்ல்மாக்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்டு லெனின், ஸ்டாலின், பெற்றிக்ஏங்கல்ஸ், மாவோசேதுங், பிரஸ்னேவ் போன்றவர்களினால் பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட கோட்பாடே ஆகும்.
- மனித வரலாறு வர்க்க போராட்ட வரலாறாகவே இதுவரை காணப்பட்டதாக மாக்சிசவாதிகள் கருதுகின்றனர். இதனால் வரலாற்றில் காணப்பட்ட எல்லாவித சமூகத்திலும் காணப்பட்ட எதிர்ப்புக்களை அடக்குவதற்காக அரசு என்ற தாபனத்தை சொத்துடைய வர்க்கம் பயன்படுத்தியது என்பதால் அரசு சொத்துடையவர்களின் கருவி என்றும் அரசு அடக்குமுறை நிறுவனமாக செயற்படுவதாகவும் கருதுகின்றனர்.
- ஆரம்ப கம்யூனிசயுகம், அடிமையுகம், நிலமானியயுகம், முதலாளித்துவயுகம், சமவுடைமைவாதயுகம், நவீன கம்யூனிசயுகம் என்ற ஆறு சமூகவளர்ச்சிக் கட்டங்களை விளக்கி அவற்றின் அரசுள்ள நான்கு சமூகத்தினையும் அதன் தன்மைகளையும் குறிப்பிட்டு அரசு வர்த்தகநலக்கருவி என்பகை உறுதிப்படுத்தல் என மாக்ஸ்சவாதம் குறிப்பிடுகின்றது.

தொகுப்பு :- திரு.நடேசபிள்ளை பிரதீபன். ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.ரா.சுகுமார் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (யா/ஏழாலை மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நவீன முதலாளித்துவ அரசு உற்பத்திக்கருவிகளுக்கு உரிமையாளர்களாகவுள்ள முதலாளித்துவ வகுப்பினால் உழைப்பினை மட்டும் கொண்டது. ஆனால் அந்த உழைப்பிற்கு உரிமைகோர முடியாத தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டுவதற்காக பயன்படுத்தப்படும் வர்க்கக்கருவி என்றும் இதனாலேயே அரசினை இல்லாதொழிக்க வேண்டும் என மாக்ஸிசவாதிகள் நம்பிக்கை கொள்கின்றனர்.

மாக்ஸ்வாதத்தின்படி அரசினை இல்லாதொழிக்கும் வரலாற்று கடமைப்பொறுப்புக்களுக்காக தொழிலாளர்களை வழிநடத்தும் கடமையினை கம்யூனிசகட்சியினால் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் கம்யூனிசக்கட்சி, தொழிலாளர் வர்க்கத்தின் முன்னோடி அரசியல் அதிகாரமாகமாறும்

தொழிலாளர் வர்க்கம் அதிகாரத்தை கைப்பற்றிக்கொள்ளும் சமவுடைமைவாத சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு அரசு குறிப்பிட்ட நாளிற்கு அவசியமானவை என மாக்ஸ்வாதிகளினால் குறிப்பிடுகின்றனர்.

சமவுடைமை புரட்சியின் பின்னர் வர்க்கமற்ற அரசு தோற்றம்பெறும் என்றும் தொழிலாளர் வர்த்தகத்திற்கெதிராக முதலாளிகள் மீண்டும் கட்டியெழுப்பக்கூடிய எதிர்ப்புரட்சியினை முறியடிக்கும் கடமைப்பொறுப்புக்களுக்கு புரட்சியின் பின்னரான வர்த்தகமற்ற அரசின் தேவை என்ற வகையில் உள்ள வாதமாகும்.

ஆனாலும் சமவுடைமை புரட்சியின் பின்னர் நீண்டகாலத்திற்கு அரசின் தவை இல்லாது இருப்பதனால் அரசு இல்லாது போதல் அல்லது உதிர்ந்துவிடல் ஏற்படும் என்றனர். அதாவது கம்யூனிச சமூகத்தில் அரசானது நிரந்தரமாகவே பட்டொழிந்துவிடும். அங்கு அரசுக்கு வேலையே இல்லை அதுவே இலட்சிய கம்யூனிச சமூகமாக மாறும் என்பது மாக்சிசவாதிகளின்

ஆனால் லெனின் இதிலிருந்து மாறுபட்ட கருத்தினை கொண்டிருந்தார். அதாவது முதலாளித்துவ அரசு தானாக அழிவதிலும் பார்க்க தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைத்துவத்தின் கீழ் இல்லாதொழிக்க வேண்டிய கருவியாக குறிப்பிட்டுள்ளார்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 3.4.3

## தாராண்மைவாதம் (லிபரல்வாதம்)

தாராண்மைவாதம் 18ம் நூற்றாண்டின் இறுதிஅரை நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவில் பரவி சுதந்திரம் தொடர்பான அரசியல் கருத்தியல் என அறியப்படுகின்றது.

17ம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் இங்கிலாந்தின் அரசியல் தத்துவவியலாளரான ஜோன்லொக் என்பார் 1689 இல் தான் வெளியிட்ட சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள் என்ற நூலில் தனியாள் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் மற்றும் சொத்துரிமைக்கான சுதந்திரம் தொடர்பான கருத்துக்கள் தாராண்மைவாத வளர்ச்சிக்கும் வலுவூட்டலுக்கும் பாரியளவில் தாக்கத்தை செலுத்தியுள்ளது.

18ம் நூற்றாண்டில் இறுதிவரைப்பகுதியில் தோற்றம் பெற்ற கைத்தொழில் முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசு தலையிடவேண்டியதில்லை என்று புராதன பொருளியலாளர்களான அடம்ஸ்மித், டேவிட் ரிக்காடோ ஆகிய இருவராலும் முன்வைக்கப்பட்டது.

இந்த பின்புலத்தில் அரசு பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்ற கருத்தியங்களை அடிப்படையாகக்கொண்டு அரசு தலையிடாவாதம் என்ற எண்ணக்கருதோற்றம் பெற்றது. இது தாராண்மைவாதத்தின் பழைய விளைவாகும்.

தலையிடாத அரசொன்றினை கட்டியெழுப்புவதற்கான அரசியல் கருத்தில் மேற்கு ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட கைத்தொழில் முதலாளித்துவ பொருளாதார முறையின் அரசியல் வெளிப்பாடாகவே பரவியது.

தொகுப்பு :- திரு.நடேசபிள்ளை பிரதீபன். ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.ரா.சுகுமார் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (யா/ஏழாலை மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பரவல் அடைந்த தாராண்மை வாதம்

(1) புராதான தாராண்மைவாதம் - தலையிடா அரசு எண்ணக்கரு

(2) நவீன தாராண்மைவாதம் - நலன்புரி அரசு எண்ணக்கரு

(3) நவதாராண்மைவாதம் - குறைந்த பட்ச அரசு எண்ணக்கரு

## புராதான தாராண்மைவாதம்

புராதான தாராண்மைவாதம் என்பது 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரவிய கருத்தியல் ஆகும். இங்கு அரசு பொருளாதாரத்தில் தலையிடக்கூடாது என்றும், அமைதியான சூழலை உருவாக்குவதும், பக்கசார்பற்ற வகையில் நீதியை நிலைநாட்டி நபர்களின் செயற்பாடுகளுக்கு மிகவும் குறைவான மட்டத்தில் தலையிடுதல் என்பதில் கரிசனை கொண்டது. இதன்படி குறைவாக நிருவகிக்கப்படும் அரசு சிறந்த அரசு என்பதே இதன் கருத்தாகும்.

## நவீன தாரண்மைவாதம்

நவீன தாராண்மைவாதம் என்பது புராதான தாராண்மை வாதத்தில் கிடைத்த பொருளாதாரத்தை முதலாளிகள் சுரண்டுவதற்கு திறந்த வாய்ப்பு கிடைத்தது. இதனால் சமூக சமத்துவமின்மை, பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து முகங்கொடுக்கும் வறுமை, தொழிலின்மை, மந்தபோசணை , நோய்கள், அறிவற்றநிலை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடவேண்டிஏற்பட்டது. இதற்கு சட்டம் ஒழுங்கு சமூக நலன்புரிகளில் அரசு தலையிட வேண்டும் என்றனர்.

சமூகத்தின் பொது நலனுக்காக அரசு தலையிடவேண்டும் என்பதை கோட்பாடு ரீதியாக முன்வைத்தவர்கள் டீ.எச்.கிறின் மற்றும் ஹொப்ஸ் ஹவுஸ் பிரபு போன்றோர்

Copyright www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நவதாராண்மைவாதம்

நவதாராண்மைவாதம் என்பது சந்தை பொருளாதார முறையின் பிரவேசத்துடன் அரசுநலன்புரிவாதம் பின்னிலையடைந்தது இதனால் முகாமைத்துவ எண்ணக்கருஅரசு பரவலடைந்தது. இதனால் அரசு பணிகளைக்கட்டுப்படுத்தல் அல்லது குறைத்தலை மேற்கொண்டது. இதனால் அரசு பொருளாதார மற்றும் சமூகசெயற்பாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட தலையீட்டை செலுத்தும் என்றனர். இதன்படி அரசு த்லையிடாவாதம் மற்றும் அரசு நலன்புரிவாதம் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையாக குறைந்தபட்ச அரசை அடையாளப்படுத்தலாம்.

இதன்படி தாராண்மைவாதம் காலமாற்றத்திற்கும் சமூகத்தேவைக்கும் ஏற்ப மாற்றமடைந்துவருவதுடன் தொடர்ந்து நிலைத்திருக்கும் ஒரு கோட்பாடாக காணப்படுகின்றது.

## 3.4.4 பெண்ணியல்வாதம்

அரசு தொடர்பான பெண்ணியல்வாதம் கோட்பாடு கிடையாது. எனினும் பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட கோட்பாடாகும். அரசு மற்றும் அரசியல் தொடர்பான விசேட அணுகுமுறை ஒன்றை பெண்ணியல் வாதம் முன்வைத்துள்ளது.

அரசியல், பொருளாதார, சமூகரீதியாக ஆண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரித்துக்களை பெண்களுக்கும் வழங்க வேண்டும் என்று வாதிடுவதே பெண்ணியல் வாதமாகும் என்று அறிஞர்கள் விளக்கம் கொடுத்துள்ளார்கள்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பெண்ணியல் வாதம் பற்றி அறிஞர்களின் விளக்கம்

சகல தளங்களிலும் ஆணுக்குள்ள அனைத்து உரிமைகளும் , பெண்களுக்கும் தேவை என்பதை வலியுறுத்துவது பெண்ணிலை வாதம்.

"டாக்கர் தேவத்தா"

இளம் பெண்கள், தொழிலிலீடுபடும் பெண்கள், வயதானபெண்கள், பொருளாதார, சமூக,மரபு சார்ந்த முறையாலும் துன்புறும் பெண்கள் ஆகிய எல்லாப்பெண்களையும் அரசியல் மற்றும்பிறஅடிமைத்தளத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொடுப்பதே பெண்ணியல் வாதம்.

" பாபரா ஸ்மித்"

பெண்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவதே பெண்ணியல் வாதம்.

"ஒகஸ்போர்ட் ஆங்கில அகராதி"

ஆதிபத்தியம் மற்றும் அடக்குமுறை ஊடாக பாலுறவுநிலை மேலெழுந்து ஆண்கள், பெண் சமூகப்பிரிவுகளாக படைக்கப்பட்டுள்ளனர் என்றும், உலகத்தில் பெண்களின் உடலை மையப்படுத்தி அவர்களின் பொருள், கட்டழகு என்பவற்றை ஒழுங்குபடுத்தி பால்நிலைக்கு ஏற்ப குறித்த கடமைப்பொறுப்புக்கள் உரித்தாக்கப்பட்டுள்ளன என்றும் பெண்ணியல்வாதிகள் கூறுகின்றனர்.

இறுதியில் பெண்ணியல்வாதிகள் நிச்சியமாக ஆண் மைய கருவியாக உள்ள அரசு, பெண்கள் மீது ஆண்கள் உலகத்தை திணிக்கும் கருவியாக செயல்படுவதாக குறிப்பிட்டனர்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பெண்ணியல்வாதம் பல்வேறு கற்றல் துறைகள் உள்ளன.

(1) லிபரல்வாத பெண்ணியம்

(2) தீவிரவாதம் அல்லது தூயபெண்ணியம்

(3) சமதர்மபெண்ணியம் அல்லது சோசலிசபெண்ணியம்.

லிபரல்வாத பெண்ணியம் என்பது

- பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் சமத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதை சட்டத்தினால் உறுதிப்படுத்துவது.
- சமமான ஊதியம், சமகல்வி, வேலைவாய்ப்பு, இவற்றை பெண்களுக்கு பெற்றுக்கொடுத்தல்.
- தன்விருப்பகருக்கலைப்பு, குழந்தை பராமரிப்பு, தாய்மைப்பேறு மற்றும் நல்வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- பாலியல் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் வன்மைகளையும் கொடுமைகளையும் கடுமையாக எதிர்த்தல் மற்றும் அதற்கான தண்டனையை


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தீவிரவாதம் அல்லது தூயபெண்ணியம்

- இது ஒரு புரட்சிகர இயக்கமாகும். பெண்ணுரிமை நிலைநிறுத்த வன்முறையிலும், தீவிர செயல்களிலும் ஈடுபட்டனர்.
- திருமணம், குடும்பம், குழந்தைப்பேறு, கருத்தரித்தல் என்பவற்றை எதிர்த்தல்.
- ஆணைவிட பெண் உயர்வானவர், பெண்கள் மட்டும் ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தல்.
- ஆண்களால் அமைக்கப்பட்ட அனைத்து அமைப்புக்களையும், சமூகஅமைப்புக்களையும் தகரத்தெழுதல்.

## சமதர்மபெண்ணியம் அல்லது சோசலிச பெண்ணியம்

- கால்மாக்ஸ், ஏங்கல்ஸ் என்போரா முன்வைக்கப்பட்டது.
- தனிச்சொத்து, வாரிசு உருவாக்கம் பெண்களை ஒதுக்குதல்.
- தந்தைவழி சொத்துரிமையும் முதலாளித்துவ அமைப்புமே பெண்ணடிமைத்தனத்திற்கு காரணங்களாகும்.
- வயது, சக்தி,இனம், தேசிய அடிப்படையில் பெண்கள் பலவீனப்படுத்தப்படுவதை எதிர்த்தல்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இவற்றை விட:

- ஆன்மிக பெண்ணியம்
- கிறிஸ்தவ பெண்ணியம்
- கலாசார பெண்ணியம்
- மனைப் பெண்ணியம்
- தலைமைத்துவ பெண்ணியம்
- கறுப்பு பெண்ணியம்
- சூழல் பெண்ணியம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திரு.நடேசபிள்ளை பிரதீபன். ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.ரா.சுகுமார் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (யா/ஏழாலை மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி

### பொருத்தமான விடையினை எழுதுக.



சமூக ஒப்பந்தவாதம் பற்றி கருத்துதெரிவித்த இரு அறிஞர்கள் பெயர்களை குறிப்பிடுக?

தோமஸ் ஹொப்ஸ், ஜோன்லொக் போன்றோர் எழுதிய நூல்களை முறையே எழுதுக.

மாக்ஸ்வாதம் பற்றிய கருத்தை முன்வைத்த இரு அறிஞர்கள் பெயர்களை குறிப்பிடுக.

அரசின் தோற்றம் பற்றி சமூக ஒப்பந்த கோட்பாட்டை ஆராய்க


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk